# கூட்டின மீன் வளர்ப்பு



குளத்தில் கூட்டின மீன் வளர்ப்பு



கட்லா



ரோகு



மிர்கால்



சாதா கெண்டை



வெள்ளிக் கெண்டை



புல் கெண்டை

மாறுபட்ட உணவுப் பழக்க வழக்கங்களையுடைய வெவ்வேறு வகை மீன்களை ஒரே குளத்தில் விட்டு வளர்த்து மீன் உற்பத்தியைப் பெருக்குவதே கூட்டின மீன் வளர்ப்பின் நோக்கமாகும்.

குளத்தில் மீன்களுக்குத் தேவையான உணவாகிய தாவர நுண்ணுயிர்களும், விலங்கின நுண்ணுயிர்களும், அழுகிய பொருட்களும், புல் பூண்டுகளும் உள்ளன. தோப்பா, வெள்ளிக் கெண்டை போன்ற மீன்கள் நீரின் மேல் பரப்பில் இரை எடுக்கும் தோப்பா விலங்கின நுண்ணுயிர்களையும் வெள்ளிக்கெண்டை தாவர நுண்ணுயிர்களையும் முக்கிய உணவாகக் கொள்கின்றன. ரோகு மீன் நீரின் இடைப்பரப்பில் இரை தேடுகிறது. மிர்கால், சாதா கெண்டை போன்ற மீன்கள் நீரின் அடிப்பரப்பில் உள்ள அழுகிய பொருட்களை உணவாகக் கொள்கின்றன. புல் கெண்டை மீன் தாவர உணவுப் பொருட்களை உண்கின்றது. இவ்வாறாக மாறுபட்ட உணவுப் பழக்கமுள்ள மீன்களை கூட்டாக குளத்தில் விட்டு வளர்ப்பதால் அவைகளுக்கும் உணவுக்காக போட்டி ஏற்படுவதில்லை. மேலும் குளத்தில் உள்ள எல்லா உணவுப் பொட்களும் பயன்படுத்தப்படுகின்றன.

### மீன் வளர்ப்பிற்கு குளத்தை தயார் செய்தல்

- குளத்தின் வளர்ந்திருக்கும் பாசியையும், கொடிகளையும், புல்-பூண்டுகளையும் முதலில் அகற்ற வேண்டும்.
- உயர்ந்த ரக மீன்களை வளர்ப்பதால் அவைகளுக்கு விரோதிகள் என்று கருதப்படும் சிலவகை மீன் வகைகள், நீர்ப்பாம்பு, ஆமை, நீர்நாய் போன்றவைகளை அகற்ற வேண்டும்.
- குளத்தின் அடியில் சேர்ந்து அழுத்திக் கிடக்கும் சகதியை முடிந்த வரை அகற்ற வேண்டும்.
- கோடையில் வற்றிவிடும் குளமானால். மத்தியில் ஒரு பள்ளம் தோண்டி வைப்பது அவசியம். குளம் மொத்தத்தில் வற்றினாலும் பள்ளத்தில் வேண்டிய அளவு தண்ணீர் தேங்கி மீன்கள் ஒதுங்கியிருக்க ஆதாரமாக இருக்கும்.
- குளத்தைச் சுற்றி கரைகளை உயர்த்தி அமைக்க வேண்டும்.
- கரைகளில் பலன்தரும் மரங்களை வைத்துப் பாதுகாக்க வேண்டும்.
- குளத்திற்கு தண்ணீரைக் கொண்டு வரும் வாய்க்கால்கள், பழைய தண்ணீரை வெளிப்படுத்தும் வடிகால்கள் ஆகியவைகளில் பலகை கதவுகள் அல்லது கம்பி வலைக் கதவுகளை வெலான் ஸ்கிரீன் வலையுடன் பொருத்த வேண்டும் (பலகைக் கதவுகள் தண்ணீரின் போக்குவரத்து அளவை கட்டுப்படுத்த உதவும். வலைக்கதவுகள், மீன்கள் தப்பிப் போகாமலும். வேண்டாத பொருட்கள் குளத்தில் வந்து சேராமலும் தடுக்கும்).

### குளத்திற்கு உரமிடுதல்

குளத்தில் உள்ள மீன்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களின் அளவை உரமிடுதல் மூலம் உயர்ந்த முடிவதால் மீன் உற்பத்தி பெருகும். உரத்தில் அடங்கியுள்ள சத்துப் பொருட்கள் நீரிலுள்ள மண்ணினால் ஈர்க்கப்பட்டு அவை படிப்படியாக வெளியிடப்டுகின்றன. பாஸ்பேட். நைட்ரேட் வகையைச் சேர்ந்த

யூரியா. அம்மோனியம், நைட்ரேட், பொட்டாசியம் ஆகியவை தேவையான உரவகைகளாகும். சாணம், கோழிக்கழிவு ஆகியவை தேவைப்படும் இயற்கை உரங்களாகும்.

## ஆறுவகை மீன்கள் இருப்பு செய்தல்

| மீன் குஞ்சுகளின் வகைகள் | மீன் குஞ்சுகளின் எண்ணிக்கை (ஹெக்டேருக்கு) |
|---|---|
| தோப்பா | 750 |
| ரோகு | 1000 |
| மிர்கால் | 750 |
| சாதா கெண்டை | 750 |
| புல்கெண்டை | 1000 |
| வெள்ளிக் கெண்டை | 750 |
| **மொத்தம்** | **5000** |

## நான்கு வகை மீன்கள் இருப்பு செய்தல்

| மீன் குஞ்சுகளின் வகைகள் | மீன் குஞ்சுகளின் எண்ணிக்கை (ஹெக்டேருக்கு) |
|---|---|
| தோப்பா | 1750 |
| ரோகு | 1500 |
| மிர்கால் | 1000 |
| வெள்ளிக் கெண்டை | 750 |
| **மொத்தம்** | **5000** |

சேல் கெண்டை, கல்சேல், வெள்ளிக்கெண்டை, பால்கெண்டை ஆகிய மீன் வகைகளையும் மேற்கண்ட வகைகளுக்குப் பதிலாக இருப்பு செய்யலாம்.

## மீன்களுக்கு இரையிடுதல்

தவிடு, புண்ணாக்கு, அரிசி மாவு போன்றவைகளை குளத்திலுள்ள உணவுப் பொருட்களைக் கணக்கிட்டு, கலந்து அதற்குத் தேவையான அளவில் தினமும் வழங்கலாம். இவ்வாறு நேரடியாக அளிக்கப்படும் தீவனங்களால் மீன் உற்பத்தி அதிக அளவை எட்டும்.

## மீன் பிடிப்பு



விற்பனைக்கு ஏற்ற அளவு மீன்களை மட்டும் பிடிப்பதால் மீன் உற்பத்தி அதிகரிக்கும். நன்கு வளர்ந்த மீன்களைப் பிடித்து விடுவதால் அதே வகை சிறு மீன்களை நீரில் அப்படியே விட்டு வைத்து வளர்ப்பது இலாபகரமான வழியாகும். துவக்கத்தில் இருப்பு செய்யப்பட்ட மீன்குஞ்சுகளின் வளர்ச்சி துரிதமாக இருப்பதால் அவை பெருகிய பின். பிடித்து விட்டு அதனால் குளத்தில் ஏற்படும் காலி பரப்பில் அதே வகை புதிய மீன் குஞ்சுகளைவிட்டு இரண்டாம் முறை மீன் வளர்ப்பைத் தொடர முடியும். பலவேறு வயதுள்ள மீன் வகைகளுடன் கூடிய குளத்தில் இவ்விதம் தொடர்ச்சியாக மீன் பிடிப்பு நடத்துவதனால் சிறந்த அளவிற்கு மீன் உற்பத்தி கிடைக்கும்.

## ஒரு ஹெக்டேர் பரப்புள்ள குளத்தில் கூட்டின் மீன் வளர்ப்பினால் கிடைக்கும் இலாபம்

இருப்பு செய்யப்பட வேண்டிய மீன் வகைகள், இவைகளின் எண்ணிக்கை, உரமிடுதல், நேரடி இரையிடல், மீன் பிடித்தல் ஆகிய விவரங்களனைத்தும் இங்கு அளிக்கப்பட்டுள்ளது.

**வரவு செலவு விவரங்கள்** (1 ஹெக்டேர் அல்லது 2.5 ஏக்கர் குளத்திற்கு)

**அ) முதலீட்டுச் செலவுகள்**

| வ. எண் | பொருள் | செலவு ரூபாய் |
|---|---|---|
| 1. | குளம் வெட்டுவதற்கு (1 ஹெக்டேர் குளம் 1 மீட்டர் ஆழத்திற்கு) | 50,000.00 |
| 2. | உள்ளேற்று / வெளியேற்று குழாய்கள் இணைப்பு மற்றும் தொட்டி கட்டுவதற்கு | 20,000.00 |
| 3. | மோட்டார் பம்ப் செட் மற்றும் சாதனங்கள் | 30,000.00 |
| | **மொத்தம்** | **1,00,000.00** |

## ஆ) நடைமுறைச் செலவுகள் (ஆண்டு ஒன்றுக்கு)

| வ. எண் | பொருள் | செலவு ரூபாய் |
|---|---|---|
| 1. | மீன் குஞ்சுகள் 5000 எண்ணிக்கை (1000-ரூ 600 வீதம்) | 3,000.00 |
| 2. | இயற்கை / செயற்கை உரங்கள் | |
| | அ. மாட்டுச் சாணம் 10 டன் - ஆண்டுக்கு | 6,000.00 |
| | ஆ. உரங்கள் 400 கிலோ /ஆண்டுக்கு<br>சுண்ணாம்பு 200 கிலோ / ஆண்டுக்கு | 4,000.00 |
| | இ. கூடுதல் தீவனம் தவிடு 1040 கிலோ (1 கிலோ ரூ.5 வீதம்) கடலைப்புண்ணாக்கு 520 கிலோ (1 கிலோ ரூ.20 வீதம்) | 20,000.00 |
| | ஈ. மீன் கட்டணம் | 3,000.00 |
| | உ. மீன் அறுவடை கூலி | 2,000.00 |
| | ஊ. பழுது பார்த்தல் / இதர செலவினங்கள் | 3,000.00 |
| | ஐ. காவலர் கூலி | 3,000.00 |
| | **மொத்தம்** | **44,000.00** |

## இ. மீன் விற்பனை மூலம் வருவாய்

| வ. எண் | பொருள் | வரவு ரூபாய் |
|---|---|---|
| 1. | மீன் பிடிப்பு 3000 கிலோ (ஒரு கிலோ ரூ.40/- வீதம்) | 1,20,000.00 |
| 2. | நடைமுறைச் செலவுகள் | 44,000.00 |
| | முதலீட்டுச் செலவினத்தில் 20% | 20,000.00 |
| | **நிகர லாபம் (ஆண்டுக்கு)** | **56,000.00** |

எனவே, வருமானத்தை இலட்சியமாகக் கொண்டு பார்க்கையில் கூட்டின மீன் வளர்ப்பு முறையே மிகவும் இலாபகரமானது. நீங்களும் கூட்டின் மீன் வளர்ப்பை மேற்கொண்டு பயன் பெறுங்கள்.

**தகவல் - மீன்வளத் துறை, தமிழ்நாடு அரசு**